**கவனிக்க**.- 02.02.2018 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் : பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2058 - 2018 පෙබරවාරි මස 09 වැනි සිකුරාදා - 2018.02.09

2058 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 246 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க**.- (i) கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்ற மயமாக்கல் சட்டமூலம் 2018, சனவரி மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, மாச்சு மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண மாகாண சபை அரச சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் வருமானப் பரிசோதகர் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

வடமேல் மாகாண மாகாண சபை அரச சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் வருமானப் பரிசோதகர் III ஆம் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடமேல் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த ஆண்/பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பரீட்சை வடமேல் மாகாண மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற்போடுவதற்கும், இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

**2. சம்பள அளவுத்திட்டம் :**

2016.02.25 ஆந் திகதியுடைய 03/2016 ஆம் இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்று நிருபத்தின்படி வருமானப் பரிசோதகர் பதவியின் III, II, I ஆம் தரங்களுக்கான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் (MN-1 1/2016) ரூ. 27,140-20x300-11 x350-10x495-10x660 - ரூ. 45,540 என்பதுடன் அந்த சம்பளத்திற்கு நீங்கள் உரித்துடையவராவது 2020.01.01 ஆந் திகதியிலிருந்தாகும்.

**3. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

3.1 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் ஆகிய இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். (இவற்றில் ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்)

மற்றும்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (பொது சாதாரண பரீட்சை தவிர்ந்த) பழைய பாடத்திட்டமாயின் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.

**3.2 ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) போட்டிப் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரி விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் ஆகக் குறைந்தது 3 வருடங்களுக்கு குறையாத காலத்திற்கு நிலையான வதிவைக் கொண்டிருக்க வேண்டும். (வதியும் கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட, பிரதேச செயலாளரினால் கையொப்பம் இடப்பட்ட வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

(iii) நற்பண்புடையவராக இருக்க வேண்டும்.

(iv) வடமேல் மாகாணத்தினுள் சகல பகுதிகளிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் அலுவல்களைச் செய்வதற்கான உடல், உள தகுதியுடனும் இருத்தல் வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற் படாதவராகவும் இருக்க வேண்டும். (தற்போது அரச சேவையில் உள்ள ஒருவருக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**4. சேவை நிபந்தனைகள் :**

4.1 இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுவது மூன்று (3) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டதாகும்.

4.3 இந்தப் பதவிக்கு நியமனம் செய்தல்/பதிவி உயர்வு வழங்குதல் செயற்கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும்

வடமேல் மாகாண மாகாண நிதி ஒழுங்குக் கோவையின் யாப்பிற்கும் வடமேல் மாகாண அரச மற்றும் வடமேல் மாகாண மாகாண சபை மூலம் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

**5. ஆட்சேர்ப்பு செய்யும் முறைமை :**

5.1 வெற்றிடங்களில் 70% திறந்த போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் நிரப்பப்படும். நியமனம் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் 40% க்கு மேல் விண்ணப்பதாரிகளால் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், மொத்தப் புள்ளிகளின் 50% க்கு மேல் பெற்றுக் கொள்ள வேண்டும். போட்டிப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைப் படியும் உடல் தகைமையைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலம் தேவையான வெற்றிடங்களுக்குச் சமமான தொகையினர் தெரிவு செய்யப்படுவார்கள்.

**6. பரீட்சை ஒழுங்குவிதிகள்**

விண்ணப்பதாரியின் பணிகளுக்கான தமைமை மற்றும் ஆற்றல்களைப் பரிசீலிக்கும் நோக்கில் தயார் செய்யப்பட்ட இரண்டு வினாப் பத்திரங்களை உள்ளடக்கியது. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமாக நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

I பொது உளச் சார்பு - ஒரு மணித்தியாலம் (100 புள்ளிகள்)
(விண்ணப்பதாரியின் பொது அறிவு, தர்க்கத் திறன், கருத்து வெளியீட்டுத் திறன், எண் ஆற்றல், கிரகித்தல் தகைமையைப் பரிசீலிக்கும் வினாப் பத்திரமாகும்)

II மொழி ஆற்றல் - காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)
(விண்ணப்பதாரியின் எழுத்தாற்றல், பிரயோகம், சரியானதும் தெளிவானதுமான கருத்து வெளிப்பாட்டு ஆற்றல், மொழிப் பிரயோகம் தொடர்பான விளக்கம், சுருக்கம் மற்றும் கட்டுரையாக்கல் திறனை மதிப்பிடும் வினாப் பத்திரமாகும்.)

**7. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 க்கு வரவு வைக்கப்படுமாறு செலுத்தப்பட வேண்டும். வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தமது நிலையான வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அந்த நிதியைச் செலுத்த வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட வ.மே. மா. ச. நி. 2 பற்றுச் சீட்டினைத் தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டுக்கள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. (பற்றுச் சீட்டின் நிழற் படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம்). எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்த பரீட்சைக் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றப்பட முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

**8. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

8.1 இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக A4 தாளின் (21 X 29 செ. மீ.) இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தின் 01 தொடக்கம் 03 வரை முதலாம் பக்கத்திலும் 04 இலிருந்து இரண்டாம், மூன்றாம் பக்கங்களிலும் அமையுமாறு தயாரிக்கப்பட வேண்டியதுடன், விபரங்கள் தம் கையெழுத்தினால் பூரணப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது சிங்கள மொழி விண்ணப்பங்களில் அதன் தலைப்பு சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி விண்ணப்பமாயின் தலைப்பு தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இடுவது அவசியமானதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் "செயலாளர், வடமேல் மாகாண மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடமேல் மாகாண மாகாண அரச சேவையின் வருமானப் பரிசோதகர் III பதவிக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை - 2018" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

8.2. ஏற்கனவே, அரச /மாகாண சேவையில் நிரந்தரப் பணியில் உள்ள விண்ணப்பதாரிகள் தம்முடைய விண்ணப்பங்களை திணைக்கள/நிறுவனத் தலைவரின் ஊடாகவே அனுப்ப வேண்டும்.

8.3 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாகக் கிடைக்கின்ற, தெளிவற்ற, பூரணமற்ற மற்றும் மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாகக் கிடைக்கின்ற, தெளிவற்ற, பூரணமற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப் படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்ளுதல் விண்ணப்பதாரியின்

பொறுப்பாகும். முறையாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் படப்பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

8.4 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது 2,40,360 ரூபாவுக்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிச் சீட்டையாகும்.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2018.03.09 ஆந் திகதியாகும்.

10. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதி அட்டை அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. தகைமையை உறுதி செய்வதற்கான உரிய ஆவணங்களின் மூலப் பிரதியை நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்க வேண்டும். சகல விண்ணப்பதாரிகளினதும் பதவிக்கான சகல தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டதாக இருத்தல் கட்டாயமானது.

11. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தை உறுதி செய்தல் :**
பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் சகல பாடங்களிற்காகவும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பரீட்சை மேற்பார்வையாளரிடம் அவர் திருப்தியடையும் படியாக தன்னுடைய அடையாளத்தை உறுதிபடுத்த வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

1. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
2. செல்லுபடியான கடவுச் சீட்டு.

***குறிப்பு.*** – பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருததப்படுவார்.

12. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தமைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரினால் நேர அட்டவணையின் பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே அது தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவின் இணையத் தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். பரீட்சை அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களின் பின்னர் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கப் பெறவில்லையாயின் பின்வரும் தகவல்களுடன் "செயலாளர், வடமேல் மாகாண மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழு, வடமேல் மாகாண மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும்.

(i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர்;
(ii) பரீட்சையின் பெயர்;
(iii) முகவரி;
(iv) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்;

13. ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவர் என அறியப்பட்டால் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். நியமனத்தின் பின்வரும் தெரிந்து கொண்டே பொய்யான தகவல்களை வழங்கியிருப்பதாக அல்லது உண்மையான தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருப்பது நிரூபிக்கப்பட்டால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

14. விண்ணப்பம் கோரல் அறிவித்தலுடன் தொடர்புள்ள விடயங்கள் மற்றும் இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏனைய விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

15. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் காணப்படுவதாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

16. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல்/தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

வடமேல் மாகாண மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பத்மினி காரியவசம்,
செயலாளர்,
வடமேல் மாகாண மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு (வடமேல் மாகாண)
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்,
2018, சனவரி 24.

(இந்த விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்கள் தயார் செய்து முன்வைக்கின்ற விளம்பரங்களில் குறிப்பிடப்படும் விடயங்கள் மற்றும் விண்ணப்பங்கள் தொடர்பில் பொறுப்பேற்கப்பட மாட்டாது.)

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

(அலுவலக உபயோகத்திற்காக) [ ]

**வடமேல் மாகாண மாகாண சபை அரச சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் வருமானப் பரிசோதகர் பதவிக்கு III ஆம் தரத்திற்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2018**

**Open competitive Examination for Recruitment to Grade III of Revenue Inspector Service of Provincial Department of Local Government (N.W.P.) -2018**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (உரிய கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக)

சிங்களம் [ ] தமிழ் [ ] ஆங்கிலம் [ ]

1. 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) திரு./திருமதி/செல்வி :-
……………………………………………………………………………………………………

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில்) Mr./ Miss./ Mrs. :-
……………………………………………………………………………………………………

1.3. முழுப் பெயர் ( சிங்களத்தில்/தமிழில் ) திரு./திருமதி/செல்வி :-
……………………………………………………………………………………………………

1.4. முழுப் பெயர் ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் )Mr./ Miss./ Mrs. :-
……………………………………………………………………………………………………

1.5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | | | ]

2. 2.1. நிரந்த முகவரி ( ஆங்கில பெரிய எழுத்துக்களில் ) :-
……………………………………………………………………………………………………

2.2. நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில் ) :-
……………………………………………………………………………………………………

2.3. அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :-
……………………………………………………………………………………………………

2.4. தொலைபேசி இலக்கம் தனிப்பட்ட :- …………………………… அலுவலகம் :- ……………………………

3. 3.1. பால் (உரிய கட்டத்தினுள் X அடையாளம் இடுக :-

ஆண் - M ☐ பெண் - F ☐

4. பிறந்த திகதி :- ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

5. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியான 2018.03.09 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள்: ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6. 2018.03.09 ஆந் திகதிக்கு வடமேல் மாகாண சபைப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவுக் காலம் :-

வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

7. கல்வித் தகைமைகள் :(விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் 3.1 இல் குறிப்பிட்டுள்ளதன் படி க.பொ.த. (சா.த.) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு மற்றும் பரீட்சை சுட்டெண் :

| | சித்தியடைந்த ஆண்டு | பரீட்சை சுட்டெண் |
|---|---|---|
| முதலாவது முறை | | |
| இரண்டாம் முறை | | |

பெற்றுக் கொண்ட பெறுபேறு

| | பாடம் | முதலாம் முறை | இரண்டாம் முறை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

க.பொ.த ( உ. த ) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு மற்றும் பரீட்சை இலக்கம்

சித்தியடைந்த ஆண்டு :- .................................... பரீட்சை சுட்டெண் :- ..........................................

| | பாடம் | பெற்றுக் கொண்ட பெறுபேறு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு இலக்கம் :

திகதி :- ..................................................

வழங்கிய பிரதேச செயலகம் :- ..........................................................................

| பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) ............................................ ஆகிய என்னால் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதும் ஆகும் எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலக்கம் ............................ மற்றும் ............................ ஆந் திகதி கொண்ட பற்றுச் சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பரீட்சை சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இந்தப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு அமைய தகுதியற்றவனாக இனம் காணப்படின் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போது அல்லது அதன் பின்னரோ என்னுடைய பரீட்சை விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும் தீர்மானத்திற்கு நான் இணங்குகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு நான் உடன்படுகிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி :- ............................................... ..................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் மூலம் ......................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

.....................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் : ....................................................

பதவி, உத்தியோகபூர்வ முத்திரை : ..................................................

திகதி : ......................................................................

(இந்த உறுதிப்படுத்தல் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமான ஆணையாளர், சட்டத்தரணி, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியின் படி பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது 240,360 ரூபாவுக்கு மேற்பட்ட வருடாந்த வருமானத்தைப் பெறும் நிரந்தரமான அரச/மாகாண அரசாங்க சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்).

தற்போது அரசாங்க /மாகாண அரசாங்க உத்தியோகத்தராக உள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ் : ..........................................................................................

திரு./ திருமதி/ செல்வி ................................................................................. என்பவர் ............................................... அமைச்சில்/திணைக்களத்தில் /நிறுவனத்தின் .......................... ஆக நிரந்தர சேவையில் பணியாற்றுவதுடன், அவரின் பணி திருப்திகரமானது என்பதுடன் அவர் குறித்த பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும், மேலே குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

....................................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :- ..........................

02-360